[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இலாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் இருக்கும் விலைக்கு விற்கப்படுகிறது என்று ஏற்கனவே சொன்னேன். வாங்குகின்ற விலையைவிட மூன்று மடங்கு இருக்கும் என்று நான் கருதவில்லை. ஆனால் வாங்கும் விலையைவிட அதிகமாகத்தான் இருந்தாக வேண்டும். தரமானதா என்று பார்க்க வேண்டும், சான்றிதழ் கொடுக்க வேண்டும். சான்றிதழ் உள்ள விதை சற்று அதிக விலையானாலும்கூட அடக்க விலைக்கு விற்கப்படுகிறது என்ற உறுதியின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கம்பு ரகம்.

***223 வின—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வீரிய ஒட்டுக் கம்பு எச்.பி. 3 என்ற ரகத்திற்குப் பதில் வேறு கம்பு ரகம் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இது கம்பு ரகத்தைப் பற்றிய கேள்வி. புதிய எச். பி. 3 (New Hybrid Bajra-3) புதிய எச். பி. 5 (New Hybrid Bajra-5) இந்த இரண்டு ரகங்களும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இவை மற்ற ரகங்களைவிட அதிக மகசூல் கொடுக்க வல்லவை. தேமல் நோய் (Downy mildew) இந்த ரகங்களை அதிகமாகத் தாக்குவதில்லை. தாக்குவதில்லை என்று சொல்லவில்லை, அதிகமாகத் தாக்குவதில்லை. மேலும், நோய்கள் தாக்காத ரகங்கள் உருவாக்குவதற்காக தீவிரமாக ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இந்த ரகத்தை மழை காலத்திலே பயிர் செய்வதா அல்லது கோடை காலத்தில் பயிர் செய்வதா? இதனல் அதிகப்படியாக எத்தனை குவிண்டால் வரும் ?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதைக் கோடையிலும் பயிர் செய்ய முடியும், மழைக் காலத்தி லேயும் பயிர் செய்ய முடியும். இதற்குத் தண்ணீர் தேவை என்ற அடிப்படையில் மழைக் கால முடிவில் பயிர் செய்வது சிறந்தது. 90 நாள் என்ற அளவிற்கு தகுந்த பருவத்தே பயிரிட வேண்டும் என்பது மட்டுமல்ல, இந்த ரகங்கள் நோயினால் தாக்கப்படுகின்றன என்றும் தெரியும்.

திரு. வி. பழனிவேல்: தலைவரவர்களே, இப்பொழுது உயர்ந்த ரக விதை என்று 5-ஆம் நம்பர் கம்பு விதை கொடுக்கப்பட்டு கதிர் முழுவதும் வருவதற்குள்ளாகவே வீணாகி ஒரு ஏக்கருக்கு இரண்டு மூன்று மூட்டைகள்கூட விளையாத நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட தவறுக்கு எந்த அதிகாரி காரணம் அல்லது அப்படிப்பட்ட விதைகளைச் சேகரிப்பதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்தப் புதிய எச்.பி. 3 என்றாலும், புதிய எச்.பி. 5 என்றாலும் இந்த கம்பு ரகங்களை இன்னும் நோய் தாக்காத வண்ணம் இருக்கும் விதைகளைக் கண்டுபிடிக்கவில்லை. ஆகவேதான் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். ஆனால் இப்பொழுது சில இடங்களில் போட்டுப் பார்த்துக் கொண்டு வருகிறார்கள். எச். பி. 3, எச். பி. 5 என்ற இரண்டு ரகங்களையும் பூச்சி தாக்குவது சற்றுக் குறைவாக இருக்கிறது, அதைத்தான் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்த வீரிய விதைகளை அரசாங்கப் பண்ணையில் உற்பத்தி செய்திருக்கிறார்களா? அல்லது தனியார்கள் உற்பத்தி செய்ததை இவர்கள் கொள்முதல் செய்து வினியோகிக்கிறார்களா? அரசாங்கப் பண்ணையிலேயே இவைகளை உற்பத்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மொத்தத்தில் சொல்லும்பொழுது அரசாங்கப் பண்ணையில் விதை உற்பத்தி மொத்தத் தேவைக்கு—நான் எல்லா ரகங்களையும் சேர்த்துச் சொல்கிறேன் — 7 சதவிகிதம்தான் உற்பத்தி செய் கிறோம். ஆனால் 7 சதவிகிதம் என்பதை மாற்றி 100 சதவிகித

மாகப் பெருக்க தீவிரமாக முயற்சி செய்தாக வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக இந்த விதை உற்பத்தி செய்யும் முறையைக் கையாண்டு வருகிறோம். தற்பொழுது தனியாரிடத்திலே வாங்கினாலும்கூட, சோதித்துப் பார்த்து, சான்றிதழ் கொடுத்து, அதற்குப் பிறகு விற்க அனுமதிக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கம்பானாலும் சரி, நெல்லானாலும் சரி, ஆண்டுக்காண்டு அதனுடைய வீரியம் குறைந்துகொண்டே வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஏ. டி. டி. 27 முதலில் இருந்த விளைச்சல் இப்பொழுது இல்லை. எனவே, இந்த வீரியம் குறையாமல் பாதுகாக்க நல்ல திட்டம் ஏதேனும் அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதற்காகத்தான் விதைப்பண்ணை தேவைப்படுகிறது. ஹைப்ரிட், வீரியம் அதிகமாக உள்ள விதைகள் எல்லாமே நாளாவட்டத்தில் தலைமுறைக்குத் தலைமுறை சற்றுக் குறைவாக விளைகிறது. ஆகவேதான், நாங்களும் புதிது புதிதாக விதைகளைக் கண்டு பிடித்துக் கொண்டு வருகிறோம். பஜ்ரா அல்லது கம்பு என்று சொல்லப்படும் விதையை நிச்சயமாக அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டும், அரசாங்க விதை பண்ணையிலிருந்து பெற வேண்டும். அல்லது அரசாங்கம் சர்ட்டிபிகேட் பெற்றதைப் பெற வேண்டும். வெளியிலே வாங்கினால் வீரியம் குறைவாகவும். விளைச்சல் குறைவாகவும் இருக்கும்.

அறநிலையத் துறை முன்னுள்ள வழக்குகள்

*** 224 வின—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள இந்து அறநிலையத் துறை துணை ஆணையாளர் முன்பாக 1972, 1973, 1974 நிதியாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளுள் இதுவரை தீர்ப்பு கூறப்பட்டவை, தீர்வு காணாமல் இருக்கும் நேர்வுகள் முறையே எத்தனை ?

(உ) தீர்வு காணாமல் இருக்க காரணம் என்ன ?